பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

25 10 2025 SATURDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- சுயசார்பு என்பது வெறும் பொருளாதார கொள்கை அல்ல என்றும், அது நாட்டின் சுயமரியாதையோடு சம்பந்தப்பட்டது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

- வேளாண் உற்பத்தியை பெருக்குவது தொடர்பாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான், இன்று வேலூரில் விவசாயிகளுடன் கலந்துரையாடுகிறார்.

- தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதத்தை ஆய்வு செய்ய, மத்திய அரசு அமைத்துள்ள நிபுணர்கள் அடங்கிய குழுக்கள் இன்று முதல் மாவட்டந்தோறும் ஆய்வு செய்யவுள்ளது

- காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டம் உட்பட பல்வேறு பாசன திட்டங்களை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

- 23 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Hansika Lamba, Sarika Malik ஆகியோர் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

சுயசார்பு என்பது வெறும் பொருளாதார கொள்கை அல்ல என்றும், அது நாட்டின் சுயமரியாதையோடு சம்பந்தப்பட்டது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், கோட்டாவில் நேற்று நடைபெற்ற சுயசார்பு இந்தியா மாநாட்டில் பேசிய அவர். பொதுமக்கள் அனைவரும் அன்றாட வாழ்வில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களையே பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்துவதன் மூலம், விவசாயிகள், தொழிலாளர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் வர்த்தகர்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

வலுவான சாலை, ரயில் மற்றும் விமான போக்குவரத்து வசதிகள் காரணமாக, நாட்டின் பல்வேறு பகுதிகள் வேகமாக முன்னேறி வருவதாகவும் திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.

>>>>><<<<<

மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான், இன்று வேலூரில் விவசாயிகளுடன் கலந்துரையாடுகிறார்.

வளர்ச்சியடைந்த வேளாண் உறுதி திட்டத்தின் ஒரு பகுதியாக, வேளாண் அறிவியல் நிலையத்தில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மையை கூடுதல் உற்பத்தி சார்ந்ததாகவும், விவசாயிகளை மையப்படுத்தியதாகவும் மாற்றுவதற்கு தேசிய மற்றும் மாநில அளவிலான முயற்சிகளை ஒன்றுபடுத்தும் வகையிலும் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் துறையில் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்தை கொண்டாடும் வகையில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்த நிகழ்ச்சியின்போது, சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்களை புகுத்திய விவசாயிகள், மகளிர் சுயஉதவி குழுக்கள், கிராமப்புற இளைஞர்கள் ஆகியோருடன் அமைச்சர் கலந்துரையாடவுள்ளார்.

வேளாண் உற்பத்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் அதன் உற்பத்தியையும், விவசாயிகளின் நலனையும் மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படும் பிரதமரின் திட்டம் மற்றும் இயற்கை வேளாண்மை முன்முயற்சிகள் குறித்தும் அமைச்சர் விவசாயிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

>>>>><<<<<

தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதத்தை ஆய்வு செய்ய, மத்திய அரசு அமைத்தள்ள நிபுணர்கள் அடங்கிய குழுக்கள் இன்று முதல் மாவட்டந்தோறும் ஆய்வு செய்யவுள்ளது.

வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதத்தை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தது.

இதையடுத்து, ஈரப்பதத்தை ஆய்வு செய்ய, மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள 3 நிபுணர்கள் அடங்கிய குழு இன்று செங்கல்பட்டு மாவட்டத்திலும், நாளை திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களிலும் ஆய்வு செய்யவுள்ளது.

இரண்டாவது குழு, தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களிலும், மற்றொரு குழு திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும் இன்று ஆய்வு செய்யவுள்ளது.

இந்தக் குழு வரும் 27ஆம் தேதிவரை ஆய்வு செய்யும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் வரவிருக்கும் சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெற்று, ஆட்சியமைக்கும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பெரம்பலூரில் நேற்று பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர். வடகிழக்கு பருவமழையால் டெல்டா மாவட்டங்களில், 12 லட்சம் ஹெக்டேரில் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டம் மற்றும் மருதை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டத்தை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று அவர் குறை கூறினார்.

மத்திய அரசு தான் 150 கோடி ரூபாய் செலவில், மருதை ஆற்றின் குறுக்கே பாலத்தை கட்டித்தந்துள்ளது என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>><<<<<

ஈரோடு – கரூர் சாலையில் சாவடிப்பாளையம் அருகேயுள்ள ரயில்வே பாலத்தின் மேல், பக்கவாட்டு தடுப்புச் சுவர்கள் உடைந்ததால், அந்த வழயாக செல்லும் ரயில்கள் மாற்றுப் பாதையில் இயக்கப்படும் என்று ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து அந்தப் பாலத்தில் ரயில்களை இயக்க முடியுமா என்று அதிகாரிகள் இன்று அதிகாலை ஆய்வு செய்தனர்.

போதுமான பாதுகாப்பு இல்லை என்று தெரிந்தவுடன், நாகர்கோவில் செல்லும் விரைவு ரயில் சேலம் – நாமக்கல் வழியாக கரூர் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, தாதரிலிருந்து திருநெல்வேலி செல்லும் ரயில், கடலூரிலிருந்து மைசூர் செல்லும் விரைவு ரயில், தூத்துக்குடியிலிருந்து மைசூர் செல்லும் மற்றொரு

விரைவு ரயில் உட்பட நான்கு ரயில்கள் சேலம் - நாமக்கல் வழியாக இயக்கப்படும் என்று சேலம் கோட்ட ரயில்வே அறிவித்துள்ளது.

இந்நிலையில், பாலத்தின் பக்கவாட்டுச் சுவர் இடிந்த இடத்தில் சீரமைப்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் கடல் மீன்வள கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இந்த கணக்கெடுப்பை மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் நடத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – லெட்சுமணன் 45 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

சேலம் மாவட்டத்தில் 10 லட்சம் பனைவிதைகளை நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, இம்மாவட்டத்தில் பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட நான்கு ஏரிகளில் விவசாயிகளுடன் இணைந்து, வேளாண் துறையினர் பனைவிதைகளை நட்டு வருவதாக வேளாண்மை உதவி இயக்குநர் திரு. வேல்முருகன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – வேல்முருகன் 22 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

தென்கிழக்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி. காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது, நாளை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும். வரும் திங்கட்கிழமை காலை தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதியில் புயலாக வலுவடையக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தில் கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

இருவரிச் செய்திகள்

யுக்ரைனுக்கு தொடர்ந்து ராணுவ உதவிகள் வழங்குவது குறித்து, நேட்டோ அமைப்பின் பொதுச்செயலாளர் General Mark Rutte, லண்டனில் ஐரோப்பிய தலைவர்களை சந்தித்து பேசினார்.

>>>>><<<<<

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு நிலைமை மேம்படும் வரை அந்நாட்டுடனான வர்த்தகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

திருச்சி, இந்திய மேலாண்மை கழகத்தின் சென்னை வளாகத்தில் பகுதிநேர முதுநிலை வணிக மேலாண்மை பட்டப் படிப்பிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழக அரசின் சார்பில் சிறப்பு மருத்துவ முகாம் இன்று வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட சின்னமோட்டூர் மருந்தியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

காஞ்சிபுரத்தில் நேற்று நடைபெற்ற விவசாயிகள் நலன் காக்கும் கூட்டத்தில், 22 விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் பயிர்க் கடன்களை மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் வழங்கினார்.

>>>>><<<<<

திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகேயுள்ள ஐயம்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளியில் மாவட்ட ஆட்சியர் திரு. மனீஷ் நரவனரே நேற்று மாணவர்களின் கற்றல் திறனை ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

தேனி மாவட்டம் வழியாக கேரளாவிற்கு போதைப்பொருளை கடத்த முயன்றதாக ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த 4 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

23 வயதிற்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Hansika Lamba, Sarika Malik ஆகியோர் இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

53 கிலோ எடைப்பிரிவு அரையிறுதியில் Hansika Lamba, 8-2 என்ற புள்ளிக்கணக்கில், கஜகஸ்தானின் Zeinep Bayanova-வை வென்றார்.

செர்பியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், தங்கப்பதக்கத்திற்கான இறுதிப் போட்டியில், இன்று இவர்கள் ஜப்பானிய வீராங்கனைகளை எதிர்கொள்கின்றனர்.

>>>>>end<<<<<